# இலங்கை புகையிரதசேவை

சுற்றறிக்கை இலக்கம் - பொ.மு/பி.க/(ஆ.11)01/2016
புகையிரத - ஜீ.எம்.எப்.35
ஈ.மெயில் - e.mail:-gmrsir@sltnet.lk
அலுவலகம் - 2421281
தொலைநகல் - 2446490

எமதுஇல.**R.W./Pay/2015**
பொதுமுகாமையாளர் அலுவலகம்
த.பெ.355 ஒல் கொட் மாவத்தை
கொழும்பு-10
திகதி:- 31.12.2016

ஜனாதிபதியின் செயலாளர்
பிரதமரின் செயலாளர்
அமைச்சரவை செயலாளர்
சகல ஆணைக்குழு செயலாளர்கள்
சகல அமைச்சு செயலாளர்கள்
சகல பிரதான செயலாளர்கள்
சகல பிரதேச செயலாளாகள்
சகல திணைக்கள தலைவர்கள்

**புகையிரத ஆணைப்பத்திரங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளல்**

புகையிரத ஆணைப்பத்திரங்களுக்கு தற்போதுள்ள நடைமுறையின் பிரகாரம் காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கையின் படி காசோலைகள் குறிப்பிட்ட படி கிடைப்பதில்லை. இதனால் புகையிரத திணைக்களத்திற்கு ஆணைப்பதிரங்கள் மூலம் கிடைக்கவேண்டிய வருமானம் நீண்டகாலமாக நிலுவையாக இருப்பது வருமான நிலுவை அறிக்கையில் இருப்பது சம்பந்தமாக கணக்காளர் நாயகம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

இதனால் 2017ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் புகையிரதஆணைப்பத்திரங்கள் மூலம் கிடைக்கவேண்டிய வருமானம் நிலுவையாக இருப்பதனை நீக்கும் பொருட்டு இதன்கீழ் காட்டப்படும் முறையில் செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(01) **ஆணைப்பத்திரம் வழங்குதல்**

இதற்கு முன்னர் காலத்துக்கு காலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்குப்பதிலாக பின்வரும் முறைகள் பின்பற்றப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.

(i) புகையிரதஆணைப்பத்திரம் வழங்கும்முகமாக புகையிரத திணைக்களத்தினால் தங்கள் திணைக்களம் நிறுவனம்/அமைச்சு என்பவற்றை அறியும்வகையில் அளிக்கப்பட்ட குறியீட்டு இலக்கம் கட்டாயமாக ஆணைப்பத்திரத்தில் இடப்படவேண்டும். இதனைவிட உங்கள்திணைக்களம்/நிறுவனத்திலிருந்து வேறுதிணைக்களங்கள் அல்லது நிறுவனத்திற்கு ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருப்பின் அவர்களுக்கு வழங்கப்படும் ஆணைப்பத்திரத்தில் அவர்கள் பணிப்புரியும் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட குறியீட்டு இலக்கம் இடப்படவேண்டும்.

(ii) விடுமுறைக்கான ஆணைப்பத்திரம் வழங்கப்படுகையில் **AB70**

இலக்கம் கொண்டபத்திரமும் அரச அலுவல் காரணமாகப்பிரயாணம் செய்ய வழங்கும் ஆணைப்பத்திரத்திற்கு **AB70B** பத்திரமும் உபயோகப்படுகையில் செலவு மீள் செய்வது பற்றிய விடயம் குறிப்பிட்ட திணைக்களத்தில் அல்லது அமைச்சினால் காட்டப்படுவதுடன் செலவு விடயம் சம்பந்தமாக வேறு கொடுப்பனவு வகை என்பதனை முன்னிட்டு 1003 காட்டப்பட வேண்டும்.

(iii) புகையிரதஆணைப்பத்திரம் வழங்கும்போது தாபனக்கோவை அத்தியாயம் XIII பிரிவு 1:5 மற்றும் 1:6 ல் காட்டப்பட்டுள்ள அறிவுரைகளுக்கைமைய ஆணைப்பத்திரம் பூரணப்படுத்தப்படவேண்டும்.

(iv) புகையிரதஆணைப்பத்திரம் வழங்க அதிகாரம் பெற்றுள்ள திணைக்கள தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் ஆணைப்பத்திரம் கையொப்பமிடப்படுகையில் அவரதுபெயர், பதவி, பதவிப்பெயர் என்பன இறப்பர் முத்திரையிடப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டும். புகையிரதஆணைப்பத்திரம் எழுதப்படும்போது ஏற்படும் மாற்றங்களைச் செய்கையில் அவற்றுக்கு கையொப்பமிட்டு பதவி நிலை பொறிக்கப்பட்ட இறப்பர் முத்திரைஇடப்படவேண்டும்.

(02) <u>புகையிரதஆணைப்பத்திரங்களுக்கான கட்டணப்பட்டியல் கட்டணம் செலுத்துதல்</u>

(i) 31.12.2016க முன்னர்வழங்கப்பட்ட புகையிரத ஆணைப்பத்திரங்களுக்கான நிலுவையாக உள்ள கட்டணம் புகையிரத பொது முகாமையாளர் என எழுதப்பட்ட காசோலை மூலம் செலுத்தப்படலாம். அந்த காசோலைகளில் காட்டப்பட்டுள்ள தொகையினை உறுதி செய்யும் முகமாக அதற்குறிய கட்டணப்பட்டியலின் பிரதி இணைக்கப்படவேண்டும்.

(ii) 2017ம் ஆண்டு தைமாதம் 01ம் திகதியின் பின் வழங்கப்படும் விடுமுறை, அரசஅலுவல் சம்பந்தமாக வழங்கப்படும் புகையிரத ஆணைப்பத்திரத்தின் பெறுமதி வரிசைக்கிரயப்படி AB70 , AB70B பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு உங்கள் செலவு விபரத்தில் காட்டப்பட்டு அந்த தொகை எனது மாதாந்த கணக்கு அறிக்யின் பொழிப்பில் காட்டப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்படும். இதனால்

சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சுகள் மாதாந்தம் இரண்டு பிரதிகள் கொண்ட கட்டணப்பட்டியல் எனக்கு அனுப்பவேண்டும் அந்தக்கட்டணப்பட்டியலில் ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றைச்சரிப்படுத்தும் முகமாக அடுத்தமாதம் 25ம்திகதிக்குள்ளாக நிதி உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட வேண்டும். இதுசம்பந்தமாக தொலைநகல் இலக்கம் 0112-432752 ஊடாக எழுத்து மூலமான விபரம் கட்டாயம் அனுப்பப்படவேண்டும்.
இதனால் 2017ம் ஆண்டு தைமாதம் 01ம் திகதி க்குப் பின்னர் வழங்கப்படும் புகையிரதஆணைப்பத்திரத்திற்கு காசோலைகள் வழங்க வேண்டிய தேவை ஏற்படாது.

(03) <u>ஓய்வூதியம் பெறுவோருக்கான புகையிரத ஆணைப்பத்திரம் வழங்குதலும் கட்டணம் அறவிடுதலும்</u>

(i) ஓய்வூதியம் பெறுவோர், அவர்களில் தங்கியிருப்போருக்காக ஓய்வூதிய திணைக்களம், மொபிரெல் நிறுவனம் மற்றும் புகையிரததிணைக்களம் இணைந்து ஆசனப்பதிவுகள் மேற்கொள்ளும் நடைமுறையின் பிரகாரம் ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் நாயகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறையின்படி ஓய்வூதிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டைஇலக்கம் என்பவற்றை புகையிரதநிலைய அதிபரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது ஓய்வூதியரினால் அவரது கைத்தொலைப்பேசி மூலம் ஆசனப் பதிவு மேற்கொள்ளும் முறைக்கேற்ப தொலைப்பேசிவலையமைப்பினை அழுத்தி ஓய்வூதிய அடையாள அட்டைஇலக்கம், தேசிய அடையாள அட்டைஇலக்கம் என்பவற்றை தொலைபேசியூடாக சமர்ப்பிப்பதன் மூலம் ஆசனப்பதிவுகளை மேற்கொள்ள முடியும். இதன்படி மாதாந்தம் ஓய்வூதிய கொடுப்பனவு திணைக்களத்தின் மூலம் புகையிரததிணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ஓய்வூதிய கொடுப்பனவு திணைக்களத்தின் மூலம் அவற்றின் செலவிற்குள் உட்படுத்தப்பட்டு புகையிரததிணைக்களத்தின் வருமானக் கணக்கில் காட்டப்பட்டு மாதாந்தகணக்கு பொழிப்பு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

(ii). பிரதேச செயலாளர்கள் காரியாலய கணனி முறைமூலம் வழங்கப்படும் இலக்கமூலம் புகையிரத நிலையங்களில் சாதாரண பயணச் சீட்டுக்கள் வழங்கப்படும். இதன்பிறகு புகையிரததிணைக்களத்தில் அதற்கான கட்டணப்பட்டியல் ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளருக்கு அனுப்பப்படவேண்டும். அந்தக்கட்டணப்பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகை ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளரினால் புகையிரததிணைக்களத்துக்கு ஈடு செய்யப்படும். இதனால் எதிர்காலத்தில் பிரதேச செயலாளரினால் ஓய்வூதியர்சம்பந்தமாக புகையிரதகட்டணப்பட்டியல் அனுப்ப வேண்டியதில்லை.

**(04)** மாகாண சபைகளினால் வழங்கப்படும் விடுமுறை மற்றும் அரசஅலுவல்கள் சம்பந்தமான ஆணைப்பத்திரக் கட்டணங்கள் மேற் கூறிய முறையில் செலுத்தப்பட முடியாது என்பதால் மாகாண சபைகள் தங்கள் கீழ் வரும் அமைச்சுகள், திணைக்களங்கள் என்பவற்றில்பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் புகையிரதஆணைப்பத்திரங்களுக்கான கட்டணங்களை விரைவாக காசோலை மூலம் செலுத்தப்படவேண்டும். அதுதவறும்பட்சத்தில் நிலுவை செலுத்துதல் மேற்கொண்டு புகையிரதஆணைப்பத்திரம் வழங்கல் என்பவற்றுக்கான வரையறை செய்யப்படவேண்டி ஏற்படும்.

**<u>(05) பொதுநியதிகள்</u>**

(i) மேற்கறிப்பிட்ட விபரங்கள் தவிர புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னதாக உங்கள் திணைக்களத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதனை அறிந்து கொள்ள வேண்டும்

(ii) வேறு காரியாலயங்களில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகபுகையிரதஆணைப்பத்திரம் வழங்குவது தொடக்கம் புகையிரததிணைக்களத்திற்கான கட்டணப்பட்டியல் செலுத்தப்படும் வரை அப்படியான உபகாரியாலங்கள், வேறுகாரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும்.

(iii) 2017ம் ஆண்டு தைமாதம் 01ம்திகதிக்குப்பின் வழங்கப்படும் புகையிரதஆணைப்பத்திரங்கள் சம்பந்தமாக மாறுப்பட்டமுறையில் கணக்கீடு செய்வதால் இந்தமுறை சிறந்த முறையில் இயங்கும்முகமாக உங்கள் கணக்காளருடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டப்படுகிறீர்கள்.

(iv) மாகாணசபைகளினால் புகையிரததிணைக்களத்திற்கான கட்டணப்பட்டியல்களின் கட்டணங்களைச் செலுத்தும்முகமாக அந்த அந்த மாகாணசபைகளுக்கான செலவீனங்களுக்கான நிதி ஒதுகீடுகள் செய்வதனை பிரதான செயலாளர் உறுதி செய்வதினை மேலும் நினைவூட்டவிரும்புகிறோம்

**06. இது சம்பந்தமாக மேலும் தகவல்களைப்பெற வேண்டுமாக இருந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.**

பிரதான நிதி உத்தியோகத்தர்- தொலைபேசிஇலக்கம் - 011-2432325
புகையிரதகணக்காளர் (வருவாய்11) தொலைபேசிஇலக்கம் - 011-2432752
ஆணைப்பத்திரகட்டணபட்டியல்பிரிவு தொலைபேசிஇலக்கம் - 011-2421281
நீட்டிப்பு இலக்கம்- 331

**07. இந்த சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வழங்கப்படுவதுடன் இந்த நடைமுறை 01.01.2017 தொடக்கம் அமுல்படுத்தப்படும்.**

ஒப்பமிடப்பட்டது
B.A.P. ஆரியரத்ன
புகையிரதபொது முகாமையாளர்

பிரதிகள்:-

01. செயலாளர் - போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவை அமைச்சு- பார்வைக்கு

02. பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவு திணைக்களம் - சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு நிதி பெறும் பொருட்டு

03. பணிப்பாளர் நாயகம், அரச கணக்கு திணைக்களம் - கணனிமயப்படுத்த திருத்தங்கள் செய்ய வேண்டின் உதவும் முகமாக

04. பணிப்பாளர் நாயகம், திறைசேரி தொழிற்பாடு திணைக்களம் - புகையிரத திணைக்களத்திற்கான முற்பண விடுவிப்புக்காக

05. கணக்காய்வாளர் நாயகம் - பார்வைக்கு

06. பிரதான உள்ளக கணக்காய்வாளர், புகையிரததிணைக்களம் - பார்வைக்கு